MAY 2022 **P/ID 35321/PTL3L**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. உரிப்பொருள் என்றால் என்ன?

2. மருதத் தெய்வம் யாது?

3. நெய்தலுக்குப் புறனான புறத்திணை எது?

4. பூவின் பெயரைப் பெறாத புறத்திணை யாது?

5. தொல்காப்பியர் சுட்டும் புறத்திணைகள் எவை?

6. களிற்றியானை நிரை - பொருள் கூறுக.

7. செலவு - பொருள் கூறுக.

8. தித்தன் எவ் ஊரினன்?

9. புறநானூற்றைப் பாடிய புலவர்கள் எத்தனை பேர்?

10. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

11. பாசடை - பொருள் சுட்டுக.

12. கலிப்பாவின் ஓசை என்ன?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. அகநானூற்றால் அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைப் பட்டியலிடுக.

14. பிரிவிடை ஆற்றாலாய தலைவியின் புலம்பலை மாமூலனார் எவ்வாறு படம்பிடித்துள்ளார்?

15. அகநானூற்று மருதனாரின் தோழி, பருவம் காட்டிக் கூறியவை யாவை?

16. நிலம் பெயரினும் நின் சொல் பெயரல் என்று பாண்டியனுக்குப் புறநானூற்றுப் புலவர் கூறுவது யாது?

17. நற்றிணைப் பாடல்களின் இலக்கிய மேன்மைகளைப் பட்டியலிடுக.

18. குறுந்தொகை பதிக்கப்பட்ட வரலாற்றை வரைக.

19. தன்னையும் உடனழைத்துச் செல்ல வற்புறுத்தும் கலித்தொகைத் தலைவியின் மனநிலையை வெளிப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்ட முறையை விளக்குக.

21. கல்லாடனார் அகநானூற்றுத் தலைவனின் கூற்றாக உரைப்பன யாவை?

22. உள்ளுறை உவமம் அமையுமாற்றையும் அதனால் பெறுகின்ற இலக்கிய இன்பத்தையும் எடுத்துரைக்க.

23. தமிழகப் போர் நெறி அறம் சார்ந்ததா? ஆராய்க.

24. தோழி கூற்றுக் கலித்தொகைப் பாடல்களின் கருத்துகளை எடுத்துரைக்க.

———————